[திரு. பா. வேல்துரை] [2009 பிப்ரவரி 24

சட்டமன்றத்தில் சொன்னதே கிடையாது. எங்களுடைய ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுகிற வகையிலே கண்டிப்பாக நீங்கள் 15,000 ரூபாய் ஹெக்டேருக்கு வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்கவில்லை என்று சொன்னால், அந்த விவசாயிகளைச் சந்திக்க முடியாது. ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற முடியாது. அந்த விவசாயிகளுடைய வாழ்வாதாரம் கெட்டுவிடும். எனவே, விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 15,000 ரூபாயாவது நீங்கள் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உரை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 65 முதல் 68 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்களின் கோரிக்கைக்கு அமைச்சர் பதில் சொல்கிறீர்களா? இல்லை.